**<u>சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களின் பட்ஜெட் உரை</u>**

- அறிவின் ஊற்றே !

ஆற்றலின் உருவே !
நிதிநிலையின் கருவே !
ஏழைகளின் தருவே !
வானசூரியனின் ஒளிப்பட்டு
தாவரங்கள் வளர்வதைப்போல
ஞான சூரியனே !
தமிழக முதல்வரே ! உங்கள் பார்வைப்பட்டு
வளர்ந்த நான் ! உங்களை வணங்கி
என் உரையை தொடங்குகிறேன்.

- ஏற்றமிகு கருத்தாளர் !

நலமான தமிழகத்தை காண
வளமான நிதிநிலையினை தந்த **மாண்புமிகு நிதி அமைச்சரே!**
**பேராசிரியர்! பெருந்தகையே !**

- **கழகத்தின் புதையலே!**

**கலைஞரின் ஏந்தலே !**
**மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களே :-**

- தமிழக வரலாற்றில் ஒரு மாபெரும் இளைஞர் சகாப்தம்

உருவாக்கிய நமது முத்தமிழ் அறிஞர், செம்மொழி கண்ட நாயகர்
பெற்றெடுத்த செம்மாதுளை,
வருங்கால தமிழகம்
**ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களே : -**

- " அணுவைத் துளைத்து, ஏழ்கடலைப் புகட்டி

குறுகத் தரித்த குறள்"

என்ற வரிகளுக்கேற்ப

- வல்லமை படைத்த உலக மொழிகளெல்லாம் நீதி நெறிகளை அள்ளித் தெளித்து கொண்டிருக்கும் உலகப் பொதுமறையாம் திருக்குறளைத் தந்த திருவள்ளுவப் பெருந்தகைக்கு வான் முட்டும் சிலையினை வைத்து வரலாற்றிலே ஒரு தனி இடத்தை பெற்று கொண்டது குமரி மாவட்டம் மட்டும் அல்ல. **தமிழக முதல்வர் அவர்களும் தான்.**

**அய்யாவின் துணிவும்**
**அண்ணாவின் கனிவும்**
எந்நாளும் பஞ்சமில்லை பொன்னுலகம் படைத்திடுவோம் இன்று என்றார் **நம் தலைவர் கலைஞர்** அதுபோல, கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தக் குடி – தமிழ்க்குடி என்பதால் தொன்மையின் அடையாளமாக பழங்கால நினைவுச் சின்னங்களை போற்றி பாதுகாக்கும் பெட்டகமாக தமிழகம் இந்திய திருநாட்டின்அனைத்து மாநிலங்களைக் காட்டிலும் மிகச் சிறந்த மாநிலமாக திகழ்ந்து வருகிறது.

- **கலைஞர் ஆட்சியில் –** சுற்றுலா இடங்களில் பிரமிக்கும் காட்சிகளும், இயற்கை சூழல்களும் இதயத்தை பசுமை சோலையாக்கும் வண்ண வண்ண காட்சிகளும் நிரம்பியிருக்கும் சித்திரங்கள் ஒரு பக்கம், சிற்பங்கள் ஒரு பக்கம், அருவிகள் ஒரு பக்கம், அதிசயக்கத்தக்க ஓவியங்கள் ஒரு பக்கம், வன விலங்குகள் ஒரு பக்கம், பளிங்கு மண்டபங்கள் ஒரு பக்கம், பாரம்பரியச் சின்னங்கள் ஒரு பக்கம், பார்த்து ரசிக்கும் காட்சிகள் ஒரு பக்கம், அற்புதங்கள் ஒரு பக்கம், அனைத்தும் ஒன்றாக சேர்ந்து மக்களை சுண்டியிழுக்கும் சுற்றுலா தலங்களாக எண்ணிலடங்கா இடங்கள் உள்ளன.

- தமிழகமே சுற்றுலா மாநிலம். எங்கெங்கு நோக்கினும் மனத்தை வருடும் மகத்தான தலங்கள்மலைவாழிடங்கள் குடைவரைக் கோயில்கள்சீர்மிகு சிற்பங்கள்அலைகடல் பரப்புகள்வரலாற்றுச் சின்னங்கள்தொல்பொருள் தான்மங்கள் அருங்காட்சியகங்கள்கவர்ச்சித்திரங்கள்வளமான வனங்கள் வற்றாத அருவிகள் என்றுவருகிற பயணிகளைஈர்க்கிற எண்ணற்றகாட்சிப் பெட்டகங்கள் விரவிக்கிடக்கும் தமிழிகத்தில் சுற்றுலாத்துறை முக்கியப் பங்கை முனைப்புடன் ஆற்றுகிறது.

- நம் தமிழக முதல்வர் அவர்கள்ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அரசாணைகள் அத்தனையும்பிறப்பிக்கப்பட்டு தேக்கத்திலிருந்த பணிகளும்முடுக்கிவிடப்பட்டன.

- இந்திய அரசு அளிக்கும் நிதி உதவியில் அதிகத் திட்டங்களைத் தயாரித்து நிதிபெற்ற முதல் மாநிலமாகத் தமிழகம் தழைத்து நிற்கிறது.

- திருவரங்கத்திற்கு ரூ.3.72 கோடி நிதி ஒதுக்கீடுஏலகிரிக்கு ரூ.3.66 கோடி நிதி ஒதுக்கீடுமுதமலை, ஆணைமலை, நீலகிரி சுற்றுலாச் சுற்றுக்கு ரூ.4.40 கோடி நிதி ஒதுக்கீடு
குடந்தை நகருக்கு ரூ.1.87 கோடி நிதி ஒதுக்கீடு
மெரீனா மேம்பாட்டுக்கு ரூ.4.93 கோடி நிதி ஒதுக்கீடு
சுற்றுலா சுற்றுச்சாலை மேம்பாடு திட்டத்தின்கீழ்
சப்தவிடங்கள் ஸ்தலங்கள் மேம்பாட்டிற்கு
ரூ.3.15 கோடி ஒதுக்கீடு என்று சென்ற நிதியாண்டில் பெருந்திட்டங்கள் செயல்படுத்தப்பட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு பணிகள் தொடங்கியுள்ளன.

- இந்த நிதியாண்டில்தரங்கம்பாடி, கொல்லிமலை மேம்பாடு பூண்டி அணைப்பகுதி அழகுபடுத்துதல்ஆகிய மூன்று பெரும் திட்டங்கள்செயல்படுத்தப்பட உள்ளன மற்றும்
கல்லணை, குன்றக்குடி, பிள்ளையார்பட்டி,பாஞ்சாலங்குறிச்சி, கோவை– குற்றாலம்,ஜவ்வாது மலை, குற்றாலம், குச்சனூார், எட்டயபுரம், சிக்கல், அடவியனார் பூங்கா,மணிமுத்தார் போன்ற இரபது சுற்றுலாத்தலங்கள்மேம்பாட்டிற்கு ரூ.12.12 கோடி அளவுக்குஆணைகள் பிறப்பிக்கப்பட்டு ஆரம்பப் பணிகள் தொடங்கியுள்ள .

* தமிழக சுற்றுலாத்துறை பன்னாட்டுச் சுற்றுலா மேம்பாட்டு முகாம்களிலும் வெளி மாநில விளம்பர முகாம்களிலும்

பங்கெடுத்துக்கொண்டு நம் மாநிலத்தை நோக்கி ஏராளமான அளவில் பயணிகள் வருவதற்கு ஏதவாக அவர்கள் கவனத்தைத் திருப்பி நம் அரிய புதையல்களைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கின்றோம்.

- பிரபலமாகாத எழில்வாய்ந்தஇடங்களைக் கண்டறிந்து அங்கு சுற்றுலா வசதிகளை ஏற்படுத்தஊக்கத் தொகையை அறிவித்திருக்கின்றோம்.

* பாரம்பரிய விடுதிகளை அமைப்பவர்களுக்கும் மானியத்தை முன்மொழிந்திருக்கின்றோம்.சுற்றுலாப் பண்பாடு வளர வேண்டுமென்பதற்காகபல இடங்களில் ஆட்டோ ஓட்டுநர்களிடமும் ஊர்தி ஓட்டுநர்களிடமும், **விருந்தினர் போற்றுதும் விருந்தினர் போற்றுதும்** முகாம்களைச் செம்மையாக நடத்தியிருக்கிறோம்.

* இதுவரை 200 பட்டதாரி இளைஞர்களுக்கு வழிகாட்டிப் பயிற்சி அளித்திருக்கிறோம்.

* பல விடுதிகள் புதுப்பிப்பு, புதிய பேருந்துகள் புதிய சுற்றலா வழித்தடங்கள் சாகசப்படகுகள் அறிமுகம்

விரைவில் கிழக்குக் கடற்கரைச் சாலையில் எங்கும் ஏறலாம் இறங்கலாம் என்கிற புதிய பேருந்த வசதியை அறிமுகப்படுத்த இருக்கின்றோம் அண்மையில் முடிந்த சுற்றலாத் தொழில் பொருட்காட்சி அனைத்துத் தரப்பினரிடமும் வரலாறு காணாத பாராட்டைப் பெற்றது ரூ.1.51 கோடி இலாபம் பெற்றுள்ளது.

* அயராது பணியாற்றிய காரணத்தால் தமிழகச் சுற்றுலா இவ்வாண்டு மூன்று தேசிய விருதுகளை முதல்

முறையாகப் பெற்றிருக்கிறது. " பட்வா " விருதுக்கும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலால் இன்னும்
பல சாதனை புரிவோம். அலையகச் சுற்றுலா
மலையகச் சுற்றுலா கலையகச் சுற்றுலா
தொல்பொருள் சுற்றுலா பண்டிகைச் சுற்றுலா
ஓய்வுச் சுற்றுலா ஆய்வுச் சுற்றுலா
ஆன்மிகச் சுற்றுலா அருவிச் சுற்றுலா
வன உயிர்ச் சுற்றுலா வரலாற்றுச் சுற்றுலா
ஊரகச் சுற்றுலா மருத்துவச் சுற்றுலா
விடுதலைச் சுற்றுலா வீரச் சுற்றுலா சாகசச் சுற்றுலா
சுற்றுச்சூழல் சுற்றுலா என்ற அத்தனை சுற்றுலாக்களிலும் சாதனை படைப்போம், சரித்திரம் உருவாக்குவோம் என்று உறுதி கூறுகிறேன்.

* தலைவர் கலைஞர் கைவசம் இருக்கும் கலைப்பண்பாட்டுத்
துறை மானியம் பற்றியும் சில கருத்துக்களைக் கூற
விரும்புகிறேன். கலை பண்பாட்டுத்துறை
இயக்ககம் அல்ல அது இயக்கம். கல்லில் உளி
நடனமாடினால் சிற்பம் தூரிகை மயிலிறகாய்
அசைவது ஓவியம் ஓசைகளை ஒருங்கிணைப்பதே இசை
உடலின் ஒவ்வொரு அங்கமும், உன்னதங்களை உணர்த்துவதே
நடனம் அன்பும் கருணையும்,அமிழ்தமாய்த் திரள்வதே பண்பாடு
மக்களின் மனத்தில் மென்மையும் மேன்மையும், துலங்கச்
செய்வதே துறையின் நோக்கம்.

* கலைக்கல்வி அளித்தல் கலைகளை வளர்த்தல்
கலைஞர்களைக் காத்தல் ஆகிய மூன்றே
முக்கியக் கடமை கட்டடச் சிற்பக் கல்லூரி
கவின்கலைகளுக்கும் கல்லூரிகள் இசையினை இயம்பக்
கல்லூரிகள் பாலகர் பயில இசைப்பள்ளிகள்
முத்தமிழ் பரப்ப இயல், இசை, நாடக மன்றம்
நுண்கலைத் துளிர்க்க ஓவிய நுண்கலைக்குழு
பள்ளி மாணவர் திறன்கள் பெற்று திறமையுடன் திகழ

சவகர் சிறுவர் மன்றங்கள் என்று கிளைகளைப் பரப்பி இதயத்தைக் குளிர்விக்கும் இனிய விருட்சமாய் இத்துறை நறுமணம் பரப்பி நற்றமிழ் வளர்க்கிறது நாட்டுப்புறக் கலைகள்நலியாமல் இருக்க நயமாய் நல்ல வாரியம் அமைத்து நல்கை வழங்கி அவர்கள் கலைகள் அழியாதிருக்க தடுத்தாட் கொண்டது அரசு இசைக்கல்லூரி மாணவர்களுக்கு திங்கள் தோறும், உதவித்தொகை 250 ரூபாய் மாமல்லபுரத்தில் திறந்த வெளி சிற்பக்கூடம் சென்னை இசைக்கல்லூரியில் தாகூர் அரங்க மேம்பாடு 1000 நலிந்த கலைஞர்களுக்கு புதிதாக உதவித்தொகை தொகையோ 500 ரூபாயிலிருந்து 1000 ரூபாயாக இரட்டிப்பு.

* பல்வேறு விழாக்களில் நாட்டுப்புறக் கலைகளுக்கு உரிய மரியாதை

* சென்னை கவின் கலைக்கல்லூரியை மேம்படுத்த நடவடிக்கை என்று எண்ணற்ற இனிய திட்டங்கள் மூலம் கலை பண்பாட்டுத்துறை சீரிய பணியாற்றி சிறப்புச் சேர்க்கிறது.

* தமிழகமெங்கும் மீண்டும் இசையும் , நடனமும் கொண்டாட்டமும், மகிழ்ச்சியும் நிரம்பி வழிய இத்துறை பல புதிய முயற்சி ளை எடுத்துள்ளது. சென்னை வருகிற கலைஞர்கள் தங்க விடுதி ஒன்றும் விரைவில் உருவாக இருக்கிறது.

- பதிவுத்துறையை பொறுத்தவரையில் 2 ஆண்டு கால நமது தலைவர் கலைஞர் தலைமையிலான கழக ஆட்சியில் எண்ணற்ற சாதனைகளை புரிந்துள்ளது. கடந்த ஆட்சியில் 2001 – 2006 ஆம் ஆண்டு ஐந்து ஆண்டுகள் அடைந்த வருவாய் ரூ.9970.28 கோடி ஆகும். ஆனால் தலைவர் கலைஞர் ஆட்சியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் அடைந்த வருவாய் ரூ.7638.86 கோடி ஆகும்.
- கடந்த அ.தி.மு.க ஆட்சியில் மூடப்பட்ட 40 சார் பதிவாளர் அலுவலகங்களில், தலைவர் கலைஞர் அவர்களின் இரண்டு ஆண்டு கால ஆட்சியில் 10 சார் பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளது.
- விவசாயிகள் அல்லது குறுந்தொழில் முனைவோர் கடனைத் திருப்பி செலுத்துவதற்காக, காப்பீடாக வங்கிகளுக்கு

எழுதிக்கொடுக்கும் உரிமை ஆவணங்கள் வைப்பு உடன்படிக்கை அல்லது நகைகள் தொடர்பான ஆவணங்களுக்கு முத்திரைத்தீர்வை முழுமையாக விலக்களிக்கப்பட்டது.

- **1.7.2006** முதல் ஆள்மாறாட்டம் மற்றும் போலி ஆவணப் பதிவுகள் பதிவு செய்வதை முழுமையாகத் தடுக்கவும், பினாமி நடவடிக்கைகளைத் தடுக்கவும், கிரய ஆவணங்களில் பதிவின்போது வாங்குபவர் மற்றும் விற்பவர் புகைப்படம் ஒட்டுவது கட்டாயமாக்கப்பட்டது. விரல் ரேகை பெறுவதும் கட்டாயமாக்கப்பட்டது.

- தகவல் தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தி பொதுமக்களுக்கு ஆற்றும் சேவையின் தரத்தை மேம்படுத்திட பதிவுத்துறை எப்போதும் முன்னிலை வகித்து வருகின்றது. பழைய நடைமுறைப்படி ஆவணப்பதிவிற்கு பல நாட்கள் ஆன நிலை மாறி பதிவு நடவடிக்கைகளை ஒரு மணி நேரத்திற்குள் முடித்திட ஏதுவாக, ஸ்டார் திட்டத்தின்கீழ் 450 பதிவு அலுவலகங்கள் செயல்படுகின்றன. மீதமுள்ள 118 அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இணையதள அடிப்படையிலான ‘ ரெஜிநெட் ‘ எனும் வலைப்பின்னல் அலுவலகங்களுக்கு இடையேயான தகவல் பரிமாற்றங்களுக்கு வழிவகுத்துள்ளது. சான்றுகள் பதிவுசெய்யப்பட்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் மற்றும் வடிப்புகள் துறையின் தனிப்பட்ட இணையதளமான (www.tnreginet.net) வழிமனு செய்யப்படின் இல்லத்திலேயே பெற வசதி செய்யப்பட்டுள்ளது. பொதுவான தகவல்கள் அளிப்பதோடன்றி இந்த இணையதளத்தில் சொத்து மதிப்பீடு செய்தல், பதிவுநடவடிக்கைகள் மற்றும் பொதுபயன்பாட்டு படிவங்கள் /மாதிரி வரைவு ஆணங்கள் பொதுமக்கள் பயன்பெற அளிக்கப்பட்டுள்ளன.

- பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள், திருமணச் சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் அவ்வாவணங்களின் மீது Hologram ஒட்டுவில்லைகள் ஒட்டும் முறை 01.08.2007 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- குழந்தை திருமணங்களைத் தடை செய்திடவும், இந்து திருமணங்களை முறைப்படுத்திடவும், 22.10.07 முதல் இந்து திருமணப் பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- 18 நிர்வாக மாவட்டப் பதிவாளர்களின் வாகனங்களுக்கு ஓட்டுநர் நியமிக்க ஆண்டுதோறும் ரூ. 15.12 இலட்சம் செலவில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் 6 பணியிடங்கள் “டெக்ஸ்கோ” மூலம் நிரப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள பணியிடங்கள் வேலை வாய்ப்பகம் மூலம் நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
- ரூ. 223.80 இலட்சம் செலவில் 250 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு 250 நகல் பெருக்கி இயந்திரங்கள் (Xerox Machine) வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறே ரூ.34 இலட்சம் செலவில் சார்பதிவகங்களுக்கு 510 அலமாரிகள் வாங்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.
- 19 மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களுக்கு 19 சீருந்துகள், ஓட்டுநர் மற்றும் எரிபொருள் ரூ.1.20 கோடி செலவில் வாங்கப்பட்டுள்ளன.

- பதிவுத் துறையில் 6 மாவட்ட தலைநகரங்களில், 5 துணைப் பதிவுத் துறை தலைவர் அலுவலகங்கள் மற்றும் 1 மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்கு ரூ. 9.57 கோடி செலவில் ஒருங்கிணைந்த கட்டடம் கட்டுவது பதிசீலனையில் உள்ளது. அவ்வாறே ரூ. 5 கோடி செலவில் 20 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடம் கட்டுவதும் பரிசீலனையில் உள்ளது.
- நான் ஒவ்வொரு அங்குலமும் நகரும் போதும் இந்தச் சமுதாயம் குன்றின் மேலிட்ட விளக்காக ஒளிவிடுவதற்கான உழைப்பையே வழங்குவதற்கு உறுதி பூண்டிருக்கிறேன். துளி வியர்வை சிந்திடுனும், அது காய்ந்து கிடக்கும் இன எழுச்சியைத் துளிர்த்திடச் செய்வதற்காகவே, என தலைவர் **கலைஞர்** அவர்களின் அறிவுரைக்கேற்ப, நான்பொறுப்பேற்றிருக்கும் துறைக்காக என்றென்றும் பாடுபடுவேன் எனக்கூறி நம் தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி சுற்றுலா மற்றும் பதிவுத்துறைக்கு நிதி

கோரும் எனது  கோரிக்கையை இம்மாமன்றம் முன்   வைக்கிறேன்.